விலைகள் கூலிகள் தொழில்நிலை

பொதுவான விலை மாற்றங்கள்

1991 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 12.2 சதவீதத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. முழுமை நியதிகளில் இது இன்னும் உயர்வான ஒன்றாகவே காணப்பட்ட போதிலும் 1990 இல் காணப்பட்ட தொடர்பான ஆண்டுச் சராசரி அதிகரிப்பான 21.5 சதவீதத்தினை விடக் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தது. விலை மாற்றங்களின் மட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிப் போக்கினைப் பிரதிபலிப்பதாய் 1991 திசெம்பரில் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையிலான கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பு (1990 திசெம்பரைவிட 1991 திசெம்பரில்) 1990 திசெம்பரின் 19.6 சதவீத உயர்வான அதிகரிப்பிற்கு மாறாக 9.0 சதவீதமாக விளங்கியது. விலை அதிகரிப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி முதலாந்தரச் சந்தை மட்டத்திலும் காணப்பட்டதுடன் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் 1991 இல் 9.2 சதவீதமான ஆண்டுச் சராசரி அதிகரிப்பையே பதிவு செய்தது. 1990 இல் ஏற்பட்ட தொடர்பான அதிகரிப்பு 22.2 சதவீதமாகும்.

1991 சனவரியில் பாண், கோதுமை மா என்பனவற்றின் நிருவகிக்கப்பட்ட விலைகள் குறைக்கப்பட்டமை, வேளாண்மை உற்பத்திகளின் நிரம்பல் நிலையில் சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்த காலநிலைத் தன்மைகள் என்பன இவ்வாண்டில் விலை அதிகரிப்புக்களின் வீதத்தினைத் தணித்த முக்கிய காரணிகளாகும். வழமையான பருவகாலப் போக்கினைப் பின்பற்றி முதலாம் காலாண்டில் விலை அதிகரிப்புக் குறைவாகக் காணப்பட்டது. இரண்டாம் காலாண்டில் காணப்பட்ட விலை அதிகரிப்புக்கள் நெல் மற்றும் ஏனைய பயிர்களின் சிறந்த சிறுபோக அறுவடை காரணமாக மூன்றாம் காலாண்டில் குறைக்கப்பட்டன. உண்மையில் முழுமையான விலை மட்டம் மூன்றாம் காலாண்டில் வீழ்ச்சியடைந்தது. எனினும் நான்காம் காலாண்டில் விலை மட்டத்தில் மிகக் கூடியளவு அதிகரிப்புக் காணப்பட்டது.

கேள்வி முகாமைத்துவத்தின் மூலம் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தும் முயற்சி தொடர்ந்திருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட கொடுகடன் வரையறைகள், மீள் நிதியிடல் வசதிகளை ஒழுங்குபடுத்தல், வங்கி வீதத்தினை மேலும் மேல் நோக்கித் திருத்தியமைத்தல், திறைசேரி உண்டியல்களில் சுறுசுறுப்பான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்றவற்றின் மூலம் சுருக்கத் தாக்கமுடைய நாணயக் கொள்கை வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. நாணய விரிவாக்கம் தொடர்ந்து காணப்பட்டபோதிலும் தனியார் துறைக்கான தேறிய கொடுகடன் வளர்ச்சி வீதம் 1990 இனைவிட 1991 இல் குறைவாகக் காணப்பட்டது.

நுகர்வோர் விலைகள்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1991 இல் 12.2 சதவீதமான ஆண்டுச் சராசரி அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இது 1990 இல் பதிவு செய்யப்பட்ட 21.5 சதவீத உயர்வினை விடக் கணிசமான அளவு குறைவானதாகும். உணவு, உடை என்பவற்றின் விலைகளிலான மெதுவான அதிகரிப்பே விரிவாக்க வீதத்தின் குறைப்பிற்கு முக்கிய காரணமாகும். அதிகரிப்பு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி குறிப்பிடத்தக்கதொன்றாயினும், விலைகளில் ஏற்பட்ட முழுமையான அதிகரிப்பு தொடர்ந்தும் உயர்வானதொன்றாகவே விளங்கியது. மொத்த அதிகரிப்

பில் 71.8 சதவீதத்திற்கு உணவின் உயர்வான விலைகள் காரணமாயமைந்த வேளையில் உடை, எரிபொருளும், வெளிச்சமும், பல்வகை விடயங்கள் என்பவற்றின் பங்களிப்பு முறையே 5.6 சதவீதம், 4.6 சதவீதம், 16.6 சதவீதமாக விளங்கின.

முதலாம் காலாண்டில் விலை மட்டத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புப் பதிவு செய்யப்பட்ட 1990 ஆம் ஆண்டிற்கு மாறாக 1991 இன் முதற் காலாண்டில் விலை அதிகரிப்புகள் மிகக் குறைவாக விளங்கின. நிருவகிக்கப்பட்ட விலைகளில் ஏற்பட்ட குறைப்பு சாதகமான அபிவிருத்திக்குப் பெருமளவிற்கு உதவியது. இரண்டாம் காலாண்டில் விலைகள் மிகக் கூடுதலாக அதிகரித்தனவெனினும் யூன் தொடக்கம் செத்தெம்பர் வரையில் உண்மையில் வீழ்ச்சியடைந்தன. ஆண்டின் இறுதி மூன்று மாதங்களிலும் விலைகளில் மிகக் கூடுதலான அதிகரிப்புக் காணப்பட்டது.

அட்டவணை 1.34

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100)

	சராசரி		வருடாந்த சராசரி சதவீத மாற்றம்		புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம்	
	1990	1991	1989 இற்கு மேலாக 1990	1990 இற்கு மேலாக 1991	1989 திசெம்பருக்கு மேலாக 1990 திசெம்பர்	1990 திசெம்பருக்கு மேலாக 1991 திசெம்பர்
எல்லா விடயங்களும் ...	1,008.6	1,131.5	21.5	12.2	19.6	9.0
பண்ட வகைகளின்படி						
உணவு ...	1,090.9	1,220.3	23.3	11.9	20.8	9.4
உடை ...	610.2	678.4	24.5	11.2	12.7	9.3
எரிபொருளும் வெளிச்சமும் ...	1,934.1	2,252.5	12.5	16.5	22.8	4.9
வாடகை ...	109.8	109.8	—	—	—	—
பல்வகை ...	1,021.0	1.146.0	18.7	12.2	16.6	9.7

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி.

சுட்டெண்ணில் 61.9 சதவீத நிறையைக் கொண்டுள்ள உணவுக்கான துணைச் சுட்டெண் 1990 இன் 23.3 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 1991 இல் 11.9 சதவீதத்தால் அதிகரித்தது. பாண், கோதுமை மா என்பவற்றின் நிருவகிக்கப்பட்ட விலைகளில் ஏற்பட்ட குறைப்பு உணவு விலைகளின் வளர்ச்சியினைக் குறைப்பதில் நேரடியான தாக்கத்தினைக் கொண்டிருந்தது மட்டுமன்றிப் பிரதியீட்டு விளைவினூடாக அரிசியின் விலையைக் குறைவாக வைத்திருப்பதற்கு உதவியதன் மூலம் மறைமுகத் தாக்கத்தினையும் கொண்டிருந்தது. 1990 இல் 24.5 சதவீதத்தினால் உயர்வடைந்த அரிசியின் சராசரி விலை 1991 இல் 0.4 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. சாதகமான காலநிலைத் தன்மைகள் காய்கறிகள், பயறு வகை போன்ற வேளாண்மைப் பொருட்களின் திருப்திகரமான

மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974 = 100

மாதாந்தம்



இலங்கை மத்திய வங்கி.

நிரம்பலின் உற்பத்திக்கு உதவியதன் மூலம் முந்திய ஆண்டினைவிட 1991 இல் இப் பொருட்களின் விலைகளில் மிக மெதுவான வளர்ச்சியைப் பேணின. இத்துடன் சீனி விலையில் வீழ்ச்சி காணப்பட்ட வேளையில் பால் உணவுகளின் விலை அதிகரிப்பு 1991 இல் மெதுவானதாக விளங்கியது. எனினும் இச் சாதகமான போக்குகள் மீன், செத்தல் மிளகாய் என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புக்களினால் எதிரீடு செய்யப்பட்டன. நிரம்பலில் ஏற்பட்ட குறைப்பு தேங்காய்களின் விலை கணிசமாக உயர்வதற்கு வழிவகுத்ததுடன் தெங்கு உற்பத்திகளின் உலகச் சந்தை விலைகள் அதிகரித்தமையினால் அதனுடன் இணைந்து தேங்காய் எண்ணெயின் விலையும் அதிகரித்தது.

ஆடைகளின் துணைச் சுட்டெண் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 11.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இது முந்திய ஆண்டில் ஏற்பட்ட 24.5 சதவீத அதிகரிப்பைவிட மிகவும் குறைவானதாகும். புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் இவ்வதிகரிப்பு 1990 இன் 12.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1991 இல் 9.3 சதவீதமாக விளங்கியது.

எரிபொருளும் வெளிச்சத்திற்குமான துணைச் சுட்டெண்ணில் ஆகக்கூடிய அதிகரிப்பு (16.5 சதவீதம்) பதிவு செய்யப்பட்டது. இது முக்கியமாக 1990 இல் ஏற்பட்ட மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பின் முழுத் தாக்கமும் இக்காலப் பகுதியில் உணரப்பட்டமையால் ஏற்பட்டதாகும். சவர்க்காரம், சிகரெட், மது பானம் போன்ற பண்டங்களின் விலை அதிகரிப்புக்கள் பல்வகை விடயங்களுக்கான துணைச் சுட்டெண்ணின் 12.4 சதவீத அதிகரிப்பிற்குக் காரணமாயிற்று. 1990 இன் இணையான அதிகரிப்பு 18.7 சதவீதமாகும்.

மொத்த விற்பனை விலைகள்

1991 இல் விலை அதிகரிப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி முதலாந்தரச் சந்தை மட்டத்திலும் பிரதிபலிக்கப்பட்டதுடன் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பும் 1990 இன் தொடர்பான காலத்தின் 22.2 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 9.2 சதவீதமாக மட்டும் விளங்கியது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் (1990 திசெம்பரைவிட 1991 திசெம்பரில்) சுட்டெண் 8.1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

மொத்த விற்பனை விலைகளிலும்கூட, வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான முக்கிய காரணம் உணவு விலைகளில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சியாகும். உணவு வகைக்கான துணைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரிப் பெறுமதி 1991 இல் 8.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1990 இல் இது 21.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது.

துணைத் தொகுதியில், ஆகக்கூடிய அதிகரிப்புக்கள் பெற்றோலிய உற்பத்திகள், இரசாயனமும் இரசாயன உற்பத்திகளும், வெறியக் குடிவகைகள், போக்குவரத்துக் கருவிகள் என்பவற்றுக்கான துணைச் சுட்டெண்களில் பதிவு செய்யப்பட்டன. பெற்றோலியப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் முழுத் தாக்கமும் 1991 இலேயே உணரப்பட்டதுடன் இது பெற்றோலிய உற்பத்திகளுக்கான துணைச் சுட்டெண்ணையும் கணிசமாக உயர்வடையச் செய்தது. தீந்தைகள், வளமாக்கி, மருந்தாக்கற் பொருட்கள் என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் இரசாயன மற்றும் இரசாயன உற்பத்திகளின் விலைகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்த வேளையில் போக்குவரத்துக்

கருவிகளுக்கான துணைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக ரயர்களினதும் தன்னியக்க மின்கலங்களினதும் விலையதிகரிப்பினால் ஏற்பட்டதாகும்.

உள்நாட்டுத் தொகுதிக்கான துணைச் சுட்டெண் இறக்குமதித் தொகுதி, ஏற்றுமதித் தொகுதி எதனையும் விட மிகவும் குறிப்பிடத்தக்க அளவினால் அதிகரித்துள்ளமையைத் துறைவாரியான பகுப்புக் காட்டுகின்றது. உள்நாட்டுத் தொகுதியின் ஆண்டுச் சராசரிச் சுட்டெண்ணின் பெறுமதி 1991 இல் 11.9 சதவீதத்தினால் உயர்வடைந்த வேளையில் இறக்குமதி, ஏற்றுமதித் தொகுதிகளின் பெறுமதி முறையே 6.1 சதவீதத்தினாலும், 7.5 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. எல்லா உயரவகை வகுப்புத் தேயிலைகளினதும் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதித் தொகுதியின் வளர்ச்சியை மிதமாக்கிய வேளையில் கோதுமை மாவின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி இறக்குமதித் தொகுதியில் இதே தாக்கத்தினை ஏற்படுத்தியது.

அட்டவணை 1.35

மொத்த விற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100)

விடயம்	சராசரி		ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம்		புள்ளிகளுப் புள்ளி சதவீத மாற்றம்	
	1990	1991	1989 இனைவிட 1990	1990 இனைவிட 1991	1989 திசெம்பரை விட 1990 திசெம்பரில்	1990 திசெம்பரை விட 1991 திசெம்பரில்
பண்டவகைப்படி						
எல்லா விடயங்களும் ...	651.1	710.8	22.2	9.2	17.0	8.1
உணவு ...	599.1	649.1	21.4	8.3	14.7	9.9
வெறிக் குடிவகைகள் ...	668.9	776.4	16.7	16.1	11.1	14.4
புடவை, காலணிக ...	404.7	426.3	17.8	5.3	18.8	3.4
தாள் உற்பத்திகள் ...	722.4	747.4	31.3	3.4	30.4	— 1.7
இரசாயன, இரசாயன உற்பத்திகள் ...	423.8	495.4	45.2	16.9	40.0	23.2
பெற்றோலிய உற்பத்திகள் ...	938.4	1,105.1	23.1	17.8	31.3	—
உலோகமல்லா உற்பத்திகள் ...	1,131.4	1,262.1	53.7	11.6	53.6	9.4
உலோக உற்பத்திகள் ...	568.6	566.5	21.1	— 0.4	— 0.7	0.6
போக்குவரத்து கருவிகள் ...	505.4	568.4	27.7	12.5	24.7	6.4
மின் கருவிகளும் வழங்கல்களும் ...	532.7	600.3	24.5	12.7	4.8	13.6
பொறிகள் ...	375.1	409.7	31.3	9.2	34.6	7.5
எரிபொருளும் வெளிச்சமும் ...	1 233.6	1 289.4	23.0	4.5	16.4	0.1
பல்வகை ...	1,167.6	1,214.8	11.0	4.1	4.2	3.4
துறைவகைப்படி எண் I						
உள்நாட்டு வகை ...	590.3	660.5	26.7	11.9	22.5	6.0
இறக்குமதி வகை ...	578.8	614.3	26.2	6.1	16.5	6.0
ஏற்றுமதி வகை ...	874.2	939.8	13.2	7.5	9.8	13.0
துறைவகைப்படி எண் II						
நுகர்வுப் பொருட்கள் ...	631.3	688.5	21.5	9.1	15.7	9.7
இடைநிலைப் பொருட்கள் ...	714.1	781.1	21.4	9.4	18.6	3.1
முதலீட்டுப் பொருட்கள் ...	700.3	769.3	39.1	9.8	33.9	8.4

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பில் நுகர்வோர் பொருட்கள் 9.1 சதவீதத் தினால் அதிகரித்த வேளையில் இடைநிலை, முதலீட்டுப் பொருட்கள் முறையே 9.4 சதவீதத்தாலும், 9.8 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவ்வீதங்கள் 1990 இல் இத்துணைச் சுட்டெண்ணில் பதிவு செய்யப்பட்ட 21.6 சதவீதம், 22.0 சதவீதம், 37.8 சதவீதம் கொண்ட அளவுகளைவிட மிகவும் குறைவாக விளங்கின.

கூலிகள்

1991 இல் அரசின் பெயரளவுக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1990 இன் அதிகரிப்பினை ஒத்ததாக விளங்கிய வேளையில் நன்கமைந்த தனியார் துறையின் பெயரளவுக் கூலிகள் 1990 இனைவிடச் சிறிதளவு அதிகரித்தன. எனினும் 1990 உடன் ஒப்பிடுகையில் 1991 இன் விலைகளில் ஏற்பட்ட மிகவும் குறைந்த வீதத்திலான அதிகரிப்புக் காரணமாக இத்தொகுதிகள் அவற்றின் உண்மைக் கூலிகளில் மாற்றம் எதையும் கொண்டிருக்கவில்லை.

நன்கமைந்த துறை

மத்திய அரசின் ஊழியர்கள் அனைவருக்குமான பெயரளவுக் கூலிகள் 1990 இன் 13.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1991 இல் 12.1 சத வீதத்தால் அதிகரித்தன.

அரச பள்ளிக்கூட ஆசிரியர்களின் பெயரளவுக் கூலிகள் 1990 இல் காணப் பட்ட அதேயளவு அதிகரிப்பான 10.0 சதவீதத்தால் அதிகரித்தன. இரு ஆண்டு களிலும் பெயரளவுக் கூலி வீத அதிகரிப்புக்கள் ஒத்திருந்தபோதிலும் முழுமையான விலை மட்டத்தில் ஏற்பட்ட சிறிதளவு அதிகரிப்பு 1991 இல் மத்திய அரச ஊழியர்களுக்கான உண்மைக் கூலிச் சுட்டெண் மாறாதிருந்தமையை விளக்கியது. இது 1990 இன் 7 சதவீத வீழ்ச்சிக்கு மாறானதாகும். இம் மொத்த உண்மைக் கூலிச் சுட்டெண்ணை அதன் உள்ளடக்கக் கூறுகளின்படி பகுத்து நோக்கின் நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் அவர்களது உண்மைக் கூலிகளில் சிறி தளவு குறைப்பினைக் கொண்டிருந்த வேளையில் சிற்றாழியர்கள் அவர்களது கூலிகளில் சிறு அதிகரிப்பை அனுபவித்தனர். எவ்வாறாயினும் அரச பள்ளிக்கூட ஆசிரியர்களது உண்மைக் கூலிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி 1990 இனைவிட 1991 இல் குறைவாக விளங்கிய போதிலும் அவர்களது உண்மைக் கூலிகள் தொடர்ந்தும் மோசமடைந்தன.

கூலி நிர்ணயச் சபைக்குட்பட்ட வர்த்தகங்களைக் கொண்டுள்ள நன்கமைந்த தனியார் துறையில் முழுமையான பெயரளவுக் கூலிகள் 1990 இன் 16.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 14.4 சதவீதத்தால் அதிகரித்தன. பெயரளவுக் கூலிகளின் வளர்ச்சி 1991 இல் மெதுவானதாகக் காணப்பட்ட போதிலும் உண்மைக் கூலிகள் 1990 இன் 3.9 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1991 இல் 2.0 சதவீதத்தால் அதிகரித்தன. கூலி நிர்ணய சபைகளின் கீழ்க் கைத்தொழில், வர்த்தகம் என்பவற்றிலுள்ள வேலையாட்களின் பெயரளவுக் கூலிகள் 21.1 சத வீத அதிகரிப்பையும் உண்மைக் கூலிகள் 8.0 சதவீத அதிகரிப்பையும் கொண் டிருந்த வேளையில் பணிகளிலுள்ள வேலையாட்கள் 25.7 சதவீத பெயரளவுக் கூலி அதிகரிப்பையும் 12.0 சதவீத உண்மைக் கூலி அதிகரிப்பையும் கொண் டிருந்தனர். எனினும் வேளாண்மையில் உள்ள வேலையாட்கள் அவர்களது பெயரளவுக் கூலிகள் 11.7 சதவீதத்தால் உயர்வடைந்த போதிலும் உண்மைக் கூலிகளில் 0.4 சதவீதமான சிறிதளவு வீழ்ச்சியைக் கொண்டிருந்தனர்.

அட்டவணை 1.36

கூலிவிதச் சுட்டெண்கள்

(1978 திசெம்பர்=100)

	1990		1991		1990 இணைவிட 1991 இல் சதவீதமாற்றம்	
	பெயரளவு கூலிவீதச் சுட்டெண்	உண்மைக் கூலிவீதச் சுட்டெண்	பெயரளவு கூலிவீதச் சுட்டெண்	உண்மைக் கூலிவீதச் சுட்டெண்	பெயரளவு கூலிவீதச் சுட்டெண்	உண்மைக் கூலிவீதச் சுட்டெண்
1. அரச ஊழியர்கள்						
எல்லா நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள்	439.6	104.3	488.2	103.3	11.1	— 1.0
கிற்றுழியர்கள் ...	513.5	121.8	582.3	123.3	13.4	1.2
எல்லா மத்திய அரச ஊழியர்கள் ...	476.8	113.2	534.6	113.2	12.1	—
எல்லாப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் ...	404.5	96.0	444.8	94.2	10.0	— 1.9
2. கூலி நிர்ணய சபை வர்த்தக திலுள்ள தொழிலாளர்கள்						
வேளாண்மைத் தொழிலாளர்கள் ...	517.2	122.7	577.7	122.2	11.7	— 0.4
கைத்தொழில் தொழிலாளர்கள் ...	379.5	89.9	459.6	97.1	21.1	8.0
பணிகள் தொழிலாளர்கள் ..	267.8	63.5	336.5	71.1	25.7	12.0
கூலி நிர்ணயசபை வர்த்தகத் தொழிலாளர்கள்...	453.5	107.6	518.8	109.7	14.4	2.0

மூலங்கள் : தொழிற்றிணைக்களம், இலங்கை மத்திய வங்கி.

1991 இல் பல வர்த்தகங்களின் ஆகக் குறைந்த கூலிகளில் அதிகரிப்பு வழங்கப்பட்டது. கூலி நிர்ணய சபைக்குட்பட்ட ஐந்து வர்த்தகங்களின் ஆகக் குறைந்த கூலி மாதமொன்றுக்கு ரூ. 200 இனாலும், 25 வர்த்தகங்களின் கூலி மாதமொன்றுக்கு ரூ. 300 இனாலும் உயர்த்தப்பட்டன. ஆண்டின் முற்பகுதியில் மாதமொன்றுக்கு ரூ. 200 இனால் அதிகரிக்கப்பட்ட ஆகக் குறைந்த கூலியைக் கொண்டிருந்த மூன்று வர்த்தகங்களுக்கும் பின்னர் ரூ. 300 அதிகரிப்பு வழங்கப் பட்டது.

தொழில் நிலை

தொழில் நிலை மீதான தற்காலிகத் தகவல்களின்படி நன்கமைந்த, நன் கமையாத தனியார் துறை இரண்டிலும் தொழில் வாய்ப்பு அதிகரித்த வேளையில் அரசதுறையில் தொழில் நிலை 1991 இல் தொ டர்ந்தும் வீழ்ச்சியுற்றது.

கூலி வீதச் சுட்டெண்கள்

1978 திசெம்பர் = 100

காலாண்டுதோறும்



இலங்கை மத்திய வங்கி.

அரசதுறைத் தொழில்நிலை மதிப்பீடுகள் அரச, அரசுசார் நிறுவனங்களின் அளவீட்டின் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இத்தரவுகள் திறைசேரியின் ஆண்டுத் தொழில்நிலை மதிப்பீடுகளுடன் மேலும் இணக்கம் காணப்பட்டுள்ளன. தற்காலிக மதிப்பீடுகளின்படி அரசதுறையின் மொத்தத் தொழில்நிலை 3.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 1991 இறுதியில் 1,307,000 ஆக விளங்கியது. மத்திய அரசின் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண அரசு, உள்ளூராட்சி மன்றத் துணைத்துறைகள் என்பவற்றை உள்ளடக்கிய அரச நிறுவனங்களின் தொழில் நிலை 1991 இறுதியில் 652,600 ஆக மதிப்பிடப்பட்டு 1990 இனைவிட 0.6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. மொத்தத் தொழில் நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாகப் பாதுகாப்புப் பணிகளின் ஆட்களையும் உள்ளடக்கிய பணி வேலையாட்கள் வகுப்பின் தொழில் நிலை வளர்ச்சியடைந்தமையால் ஏற்பட்டதாகும். இவ் வகுப்புப் பெருமளவு விகிதாசாரமான அமைய ஊழியர்களைக் கொண்டிருந்தது. பணிசுள் வேலையாட்களைத் தவிர்க்குமிடத்து மீதியான அரசதுறையின் தொழில் நிலை 6.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகள், அரசிற்குச் சொந்தமாக்கப்பட்ட வர்த்தக முயற்சிகள், அரச வங்கிகள் என்பவற்றை உள்ளடக்கும் அரசுசார் துணைத் துறையின் முழுமையான தொழில் நிலை 6.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அரச பணியின் அளவினைக் குறைக்கும் நோக்குடன் உரிய காலத்திற்கு முந்திய ஓய்வூதியத்திற்கு ஊக்குவிப்புகளை வழங்கும் திட்டம் 1990 ஒற்றோபரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 44,066 அரச ஊழியர்கள் 1991 இறுதியில் ஓய்வு பெறுவதற்கு விருப்புத் தெரிவித்தனர். இது அரசதுறைத் துறையினுள் பெரும்பாலான வகுப்புகளிலுள்ள தொழில் நிலையைக் குறைப்பதற்கு உதவியது. பெருமளவு தொழில் தருநரான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மக்கள் மயப்படுத்தலும் பல்வேறு அரசுசார் நிறுவனங்களின் தனியார் மயப்படுத்தலும் அரசுசார் துறையின் தொழில் நிலை அளவினைக் குறைப்பதற்குப் பெருமளவில் உதவின.

தொழில் வகைப்படியான தொழில்நிலைப் பகுப்பு முந்திய ஆண்டிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றமெதனையும் காட்டவில்லை. அரசதுறையில் மிகப்பெரும் தனித்தொகுதி ஊழியர்களாகத் தொடர்ந்தும் உடலுழைப்பு வேலையாட்கள் விளங்கி 501,000 ஆகக் காணப்பட்டனர். இவ்வகுப்பின் தொழில்நிலையில் 5.3 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. அரச பெருந்தோட்டங்களின் தோட்டத் தொழிலாளர்களது தொழில் நிலையில் ஏற்பட்ட 5.8 சதவீதக் குறைவு இவ் வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்கியது. இரு அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனங்களின் தோட்டத் தொழிலாளர்களது மொத்தத் தொழில்நிலை 1990 இறுதியின் 394,100 உடன் ஒப்பிடுகையில் 1991 இறுதியில் 371,100 ஆக விளங்கியது.

தகைமைத் தொழிலாளர், தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் 1991 இல் 248,700 ஆக மதிப்பிடப்பட்டு அரச துறையின் மொத்தத் தொழில் நிலையில் 19.0 சதவீதமாக விளங்கினர். இவ்வகுப்பின் தொழில் நிலை 6.0 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்றதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அரச துணைத் துறையினுள் மொத்தத் தொழில் நிலையில் 73.4 சதவீதத்திற்கு வகைகூறும் பள்ளிக்கூட ஆசிரியர்கள் தொழில் நிலையில் 4.4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தனர். இது பெரும்பாலும் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பல ஆசிரியர்கள் உரிய காலத்திற்கு முன் ஓய்வுபெற விருப்புத் தெரிவித்தமையால் ஏற்பட்டதாகும். மாறாக அரசதுறைத் துறையில் மருத்துவர்களின் எண்ணிக்கை 9.8 சதவீதத்தால் அதிகரித்து 4,500 ஆக விளங்கியது. இது பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கப்பட்டதனைத் தொடர்ந்து வெளிவரும் மருத்துவப் பட்டதாரிகளின் எஞ்சிய தொகைக்கு நியமனங்கள் வழங்கப்பட்டமையால் ஏற்பட்டதாகும். மொத்த அரச துறையில் எழுதுவினைஞர் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழிலாளர்கள் தொகை 1991 இல் 202,700 ஆக மதிப்பிடப்பட்டு இவ்வாண்டில் 8.0 சதவீத வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. 1991 இல் 253,900 ஆக மதிப்பிடப்பட்ட பணித் தொழிலாளர் வகுப்பு, தொழில் நிலையில் 14.3 சதவீதமான அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

தொழில் நிலை தொடர்பான காலத் தொடர்த் தரவுகள் கிடைக்கப் பெறாமையால் ஊழியர் சேமநிதியத்தில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்கள்போன்ற குறிகாட்டிகள் நன்கமைந்த தனியார் துறையின் தொழில் நிலையை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியத்தில் தொழிற்பாட்டிலுள்ள கணக்குகளின் எண்ணிக்கை 1,188,757 இலிருந்து 1991 இல் 1,267,835 இற்கு 6.7 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒப்புதலளிக்கப்பட்ட ஊழியர் சேம நிதியங்களின் மொத்தத் தனியார் துறைத் தொழில் நிலை முந்திய ஆண்டினை விட 1991 இல் பெரும்பாலும் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு (கொ.பெ.பொ.ஆ.) வின் கீழ்த் தொழிற்படும் தொழில் முயற்சிகளின் தொழில்நிலை 1991 இல் 19.4 சதவீதத்தால் விரிவடைந்தது. 1991 திசெம்பரில் காணப்பட்ட மொத்தம் 85,457 தொழில் நிலையில் 78 சதவீதம் பெண்களாவர். கொ.பெ.பொ.ஆ. இன் தொழில் நிலையில் ஏறத்தாழ 57 சதவீதம் கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையத்தில் காணப்பட்டது. இதில் 71 செயற்றிட்டங்கள் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்தன. 1991 இன் நடுப்பகுதியில் நிறுவப்பட்ட கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயம் 20,000 பேருக்குத் தொழில் வாய்ப்பை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசு சுயதொழில் வாய்ப்பினூடாக வறுமை ஒழிப்பிற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கியது. சுடன் திட்டங்களின் கீழ் வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளுக்கான கொடுகடன் வசதிகள் தொடர்ந்தும் விரிவாக்கப்பட்டன. 1991 இறுதியில் முதலாம், இரண்டாம் சுற்று சனசக்தி குடும்பங்களில் 94,861 ஏற்கனவே வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளில் வெற்றிகரமாக நிலைப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் 58,704 குடும்பங்கள் தம்மைக் கொடுகடன் வசதிகளுக்கு ஆளாக்கிக் கொண்டதுடன் வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகளில் தம்மை நிலைப்படுத்தும் செயற்பாட்டில் உள்ளன.

வளைகுடா பிரச்சினையின் விளைவாக 1991 இன் முதல் மூன்று மாதங்களில் மேற்கு ஆசியாவில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பில் தற்காலிகமான பின்னடைவு காணப்பட்டபோதிலும் பிரச்சினைகள் முடிந்த பின்னர் நாடு திரும்பிய தொழிலாளர்களில் பெருந்தொகையினர் வெளிநாட்டுக்குத் தொழில் புரியச் செல்வதில் கணிசமான மீட்சியினைக் காணக்கூடியதாக இருந்தது. 1991 இல் உரிமம் பெற்ற முகவர்களூடாகவும் இலங்கை வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புப் பணியகத்தினூடாகவும் தொழில் வாய்ப்பைப் பெற்றோர் தொகை மொத்தம் 65,007 ஆகக் காணப்பட்டது. இது முந்திய ஆண்டினைவிட 52.5 சதவீதம் கூடுதலானதாகும். எனினும் இலங்கை வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வானூர்தி நிலைய அளவீட்டின்படி உரிமம் பெற்ற முகவர்களூடாகவும் பணியகத்தினூடாகவும் தொழில் வாய்ப்பைப் பெற்றோரின் எண்ணிக்கை உண்மையில் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பைப் பெற்றோரில் ஏறத்தாழ அரைப் பங்காகவே உள்ளது.